## தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திரு. கொ. வீர ராகவ ராவ், இ.ஆ.ப.,
தொழில்நுட்பக் கல்வி ஆணையர்

---

**செயல்முறை ஆணை எண். 5585/டி3/2022, நாள்: 07.12.2023**

பொருள்: நிர்வாகம் – தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் – மையப் பாலிடெக்னிக் கல்லூரி, தரமணி, சென்னை – (லேட்) திருமதி.ம.செல்வி, பெருக்கு பணியாளரின் வாரிசுதாரர் (மகள்) திருமதி.ம.கெஜலட்சுமி, என்பவருக்கு கருணை அடிப்படையில் சென்னை, தரமணி, டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் வழங்கியது – பணிவரன்முறைப்படுத்தி அரசாணை வழங்கப்பட்டது – ஆணையர் நிலையில் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: அரசாணை (3ப) எண்.38. உயர்கல்வித் (சி2)த் துறை, நாள் 20.11.2023.

---

பார்வையில் காணும் அரசாணையில், சென்னை, தரமணி, டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் வழங்கப்பட்டு, 28.01.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திருமதி.ம.கெஜலட்சுமி, என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில், அவர் பணியில் சேர்ந்த நாளான 28.01.2022 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அரசாணை இணைக்கப்படுகிறது)

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 சட்டப்பிரிவு 28 (1)–ன்கீழ், அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 28.01.2022 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணைகள் வழங்கப்படுகின்றன.

தனியர், பணியில் சேர்ந்த நாள் முதல், மூன்றாண்டு பணிகாலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தை நிறைவு செய்ய வேண்டும். மேலும், தகுதிகாண்பருவகாலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும்.

இணைப்பு: பார்வையில் காணும் அரசாணை (அசல்)

ஒம்/– கொ. வீர ராகவ ராவ்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர்

பெறுநர்
திருமதி.ம.கெஜலட்சுமி
இளநிலை உதவியாளர்,
டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர்
பாலிடெக்னிக் கல்லூரி,
தரமணி, சென்னை. (முதல்வர் வழியாக)

நகல் :
முதல்வர்,
டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர்
பாலிடெக்னிக் கல்லூரி,
தரமணி, சென்னை

டி3/ தொகுப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஜெகசுந்திரா 7/12/2023
உதவி இயக்குநர் (நிருவாகம்)
7.12.2023